நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தென்காசி
முன்னிலை, திருமதி.S.முத்து லெட்சுமி, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர், தென்காசி
2026 ம் வருடம் ஜீன் திங்கள் 2 ம் நாள் செவ்வாய்கிழமை
குற்றப்பலவகை மனு எண்.755/2026
**CNR.No.:TNTS02-002129-2026**
IN
குற்ற எண்.243/2026

கண்ணன்
த/பெ.சண்முகவேல் ... மனுதாரர்/எதிரி

/எதிர்/

அரசுக்காக – காவல் உதவி ஆய்வாளர்,
பாவூர்சத்திரம் கா.நி.கு.எண்.243/2026 ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு இறுதியான விசாரணைக்காக இன்று இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திரு.என்.தங்கராஜ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரருக்காக கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் பார்வையிட்டு பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் ...

**உத்தரவு**

மனுதாரர்/எதிரிக்கு பிரிவு 480 BNSS ன் கீழ் பிணை வழங்க வேண்டி பிணை மனு தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்** :–

மனுதாரருக்கு எதிராக U/s.296(b), 118(1), 303(2), 324(4), 351(3) BNS –ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் எவ்வித குற்ற செயல்களிலும் ஈடுபடவில்லை என்றும், மனுதாரர் தலைமறைவாக மாட்டார் என்றும், மனுதாரர் ஜாமீன்தாரர்களை முன்னிருத்த தயாராக இருக்கிறார் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. அரசு தரப்பு பதிலின் சுருக்கம்** :–

அரசு தரப்பில், எதிரி ஆதாய நோக்கோடு பட்டு புடவைகளை திருடியுள்ளனர் என்றும், மேலும் இவ்வழக்கு புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்றும், வாதியும், எதிரியும் வேறு வேறு சமுதாயம் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் என்றும், எனவே பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளது என்றும், எதிரி சாட்சிகளை கலைக்க நேரிடும் என்பதாலும், எனவே எதிரியை பிணையில் விட கடுமையாக ஆட்சேபணை

தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>4. தீர்வு</u>** :-

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

மனு, அரசு தரப்பு பதில், வழக்கு கோப்புகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

5. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில் இந்த வழக்கு எதிரி மீது பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், இந்த நீதிமன்றம் விதிக்கும் எந்த நிபந்தனையும் ஏற்றுக் கொள்ள மனுதாரர் தயாராக உள்ளார் என்றும், எனவே மனுதாரரின் மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

6. ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும் போது, மனுதாரர் மீது U/s.296(b), 118(1), 303(2), 324(4), 351(3) BNS –ன் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் 23.05.2026 முதல் நீதிமன்ற காவலில் இருந்து வருவது தெரிய வருகிறது.

7. இந்த வழக்கில், மனுதாரர் 23.05.2026 அன்று நீதிமன்றக் காவல் அடைப்பு செய்யப்பட்டு, இன்று வரையில் சிறையில் இருப்பதை கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் புலன் விசாரணை ஓரளவு முடிந்திருக்கும் என்பதை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும் மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும், இந்த மனுதாரர்கள்/எதிரிகளுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் பிணை வழங்கி உத்தரவிடுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>** :-

1. இந்த மனுதாரர் இரண்டு பிணையதாரர்களை ஆஜர்படுத்தி தலா ரூ.10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2. மனுதாரர் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடக்கூடாது.

3. மனுதாரர் சாட்சிகளை கலைக்கவோ, மிரட்டவோ கூடாது.

4.விசாரணைக்கு தேவைப்பட்டால் காவல்துறையால் அழைக்கப்படும் போதெல்லாம் மனுதாரர் தவறாமல் முன்னிலையாக வேண்டும்.

5.மனுதாரர் பிணையில் வெளிவரும் நாட்களில் இருந்து தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் 20 நாட்கள் நேரில் ஆஜராகிக் கையொப்பம் செய்ய வேண்டும், இந்நீதிமன்றம் உத்தரவிடும்போது இந்த நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்படுகிறது.

6. மனுதாரர் பிணையில் வெளியே வந்த பிறகு தலைமறைவாகவோ, வெளிநாட்டிற்கு தப்பி செல்லவோ கூடாது, வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

முடிவில், இம்மனு மேற்சொன்னவாறு அனுமதிக்கப்படுகிறது.

இத்தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, பின்னர் 2026ம் வருடம் ஜீன் திங்கள் 2ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

MUTHU LAKSHMI

Digitally signed by MUTHU LAKSHMI
Date: 2026.05.26 17:24:25 +0530

நீதித்துறை நடுவர்,
தென்காசி.